திருகோணமலை மாவட்டத்தின் 22 கமநலசேவை குழுக்கள் - 2024

---

1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 திருகோணமலை மாவட்டத்தின் 22 கமநலசேவை குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கு தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 2024 ஆம் ஆண்டிற்குரிய திருகோணமலை மாவட்டத்தின் 22 கமநலசேவை குழுக்கள் தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த 22 கணக்காய்வு அறிக்கைகளில் முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் ஒன்று வெளியிடப்பட்டிருந்ததுடன், அவ் அபிப்பிராயத்திற்கு காரணமாக இருந்த பொருண்மையான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

1.3 நிதிக்கூற்றுக்கள்

1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உட்பட கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணக்கமின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 40 ஆம் பந்தியின் பிரகாரம், ஒரு நிருவகம் தனது நிலையான சொத்துக்களைக் கணக்கிடும்போது கிரய மாதிரி அல்லது மீள்மதிப்பீடு மாதிரியைத் தெரிவு செய்ய வேண்டியதுடன், அக்கொள்கை முழுமையான ஆதனம், பொறி மற்றும் உபகரண வகுப்பிற்குப் பயன்படுத்தப்பட வேண்டும். இருப்பினும், 22 கமநலச் சேவை குழுக்களின் நிலையான சொத்துக்களைக் கணக்கிடுவது தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	ஆணையாளரின் அனுமதியுடன் எதிர்காலத்தில் இது சீர்செய்யப்படும்.	கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிலையான சொத்துக்கள் கணக்கிடப்பட வேண்டும்.
(ஆ)	06 கமநலச் சேவை நிலையங்களினால் மீளாய்வாண்டினுள் உரிய தேய்மானக் கொள்கைக்கமைய தேய்மானம் செய்யப்படவில்லை.	எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள தேய்மானக் கொள்கைக்கமைய தேய்மானம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	7 கமநலச் சேவை நிலையங்களின் இருப்பு மதிப்பீட்டுக் கொள்கையானது நிதி கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.	எதிர்காலத்தில் இருப்பு மதிப்பீட்டுக் கொள்கைகள் வெளிப்படுத்தப்படும்.	இருப்பு மதிப்பீட்டிற்குரிய கணக்கீட்டுக் கொள்கையானது நிதி

			கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும்.
(ஈ)	06 கமநலச் சேவை நிலையங்களின் மீளாய்வாண்டின் நிதி கூற்றுக்களில் கடன்பட்டோருக்கு உரிய நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை.	எதிர்காலத்தில் உரிய நிதி ஒதுக்கீடுகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடன்பட்டோருக்கு உரிய நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டும்
(உ)	04 கமநலச் சேவை குழுக்களினால் ஏக்கர் வரி வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் என்பன காசு அடிப்படையில் நிதி கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன.	எதிர்காலத்தில் சரியாகத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	வருமானங்கள் மற்றும் செலவுகள் நிகழ்வு அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும்.
(ஊ)	விவசாயி வங்கி மற்றும் கமநலச் சேவை குழு ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்க வேண்டும் என்ற போதிலும், 06 கமநலச் சேவை நிலையங்களினால் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படவில்லை	அறிவுறுத்தல்களுக்கமைய எதிர்காலத்தில் இதனைச் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(எ)	05 விவசாயி வங்கிகளின் நிதிக் கூற்றுக்களில் உள்ள அனைத்து இலக்கவியல் தகவல்களும் கடந்த காலப்பகுதியுடன் ஒப்பீட்டு ரீதியாக வெளிப்படுத்தப்படவில்லை.	எதிர்காலத்தில் இதனைச் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதிக் கூற்றுக்களைக் கடந்த ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியாகச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஏ)	மீளாய்வாண்டிற்குள் விவசாயிகளிடமிருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 1,101,915 பெறுமதியான நன்கொடைகள் கமநலச் சேவை குழுவின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அவை தொடர்பான விரிவான தகவல்கள் பேணப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் கணக்கீடு சார்ந்த நடவடிக்கைகள் குறித்து உரிய கவனம் செலுத்தப்படுவதை உறுதி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.	கமநலச் சேவை நிலையங்களுக்குக் கிடைக்கும் நன்கொடைகள் பற்றிய தகவல்களை முறைப்படியாக ஆவணப்படுத்துவதற்கும், நியமங்களுக்கமைய கணக்கிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(ஐ)	விவசாயிகளுக்கான கடன்களை வழங்கும்போது, உரிய கடன் தொகைகள் மற்றும் கடன் மீளச் செலுத்துகைகள் என்பன கடன்பட்டோர் பேரேட்டில் பதியப்பட வேண்டும் என்ற போதிலும், மீளாய்வாண்டிற்குரிய ஒரு கமநலச் சேவை குழுவினால் வழங்கப்பட்ட கடன்கள் தொடர்பான தகவல்கள் கடன் பேரேட்டில் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. 13 கடன் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பான மாதிரிப் பரிசோதனையின்போது, ரூபா 700,000	உடன்படுகிறேன். எதிர்காலத்தில் இதனை சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	விவசாயிகளுக்குக் கடன்களை வழங்கும்போது முறையாக ஒப்பந்தம் செய்துகொண்டு வழங்கப்பட வேண்டும் என்பதுடன், வழங்கப்பட்ட கடன் தகவல்களைக் கடன் பேரேட்டில் உள்வாங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பெறுமதியான கடன் கொடுக்கல்வாங்கல்கள் கடன் பேரேடுகளில் உள்வாங்கப்படவில்லை என்பது கண்டறியப்பட்டது.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் 14 கமநலச் சேவை நிலையங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 3,335,524 ஆன தேய்மானச் செலவுகள் நிதிச் செயலாற்றல் அறிக்கையில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தமையினால், மீளாய்வாண்டின் மிகையானது அந்தத் தொகையினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆண்டிற்குரிய தேய்மானச் செலவைச் சரியாகக் கணக்கிட்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், சரியான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்படல் வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் இரண்டு கமநலச் சேவை நிலையங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 82,234 ஆன தேய்மானச் செலவுகள் நிதிச் செயலாற்றல் அறிக்கையில் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தமையினால், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் மிகையானது அந்தத் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.	- மேற்படி -	- மேற்படி -
(இ)	மீளாய்வாண்டில் இரண்டு கமநலச் சேவை நிலையங்களுக்குரிய மொத்தப் பெறுமதி ரூபா 66,540 கொண்ட அறை வாடகை வருமானங்கள் நிதிச் செயலாற்றல் அறிக்கையில் காட்டப்படாமையினால், மீளாய்வாண்டின் மிகையானது அந்தத் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.	- மேற்படி -	ஆண்டிற்குரிய வருமானத்தைச் சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், சரியான பெறுமதி நிதி கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்பட வேண்டும்.
(ஈ)	மீளாய்வாண்டில் இரண்டு கமநலச் சேவை குழுக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 218,754 கொண்ட வருமானங்கள் நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தமையினால், மீளாய்வாண்டின் மிகையானது அந்தத் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.	- மேற்படி -	- மேற்படி -

(உ)	கமநலச் சேவை நிலையமொன்றினால் மீளாய்வாண்டிற்குள் கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட உர மூட்டைகளுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 190,000 செலவானது நிதிச் செயற்பாட்டு அறிக்கையில் உள்வாங்கப்படாமையினால், மீளாய்வாண்டின் மிகையானது அந்தத் தொகையினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.	இந்தப் பந்திக்குரிய பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	ஆண்டிற்குரிய செலவுகளைச் சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், உரிய சீராக்கல்கள் செய்யப்பட வேண்டும்.
(ஊ)	08 கமநலச் சேவை நிலையங்களின் ஏக்கர் வரிப் பதிவேட்டின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய ஏக்கர் வரி வருமானம் ரூபா 4,722,937 ஆக இருந்த போதிலும், அது நிதிச் செயலாற்றல் அறிக்கையில் ரூபா 4,058,310 ஆக காட்டப்பட்டிருந்தமையினால், மீளாய்வாண்டின் மிகையானது ரூபா 664,627 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	ஆண்டிற்குரிய வருமானத்தைச் சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், உரிய சீராக்கல்கள் செய்யப்பட வேண்டும்
(எ)	கமநலச் சேவை நிலையமொன்றின் உர விற்பனைக் கணக்கின்படி விற்பனைப் பெறுமதி ரூபா 8,866,300 ஆக இருந்த போதிலும், மீளாய்வாண்டின் நிதிச் செயலாற்றல் அறிக்கையில் அது ரூபா 9,260,450 ஆக காட்டப்பட்டிருந்தமையினால், மீளாய்வாண்டில் விற்பனையானது ரூபா 394,150 இனால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.	-மேற்படி-	-மேற்படி-
(ஏ)	03 கமநலச் சேவை நிலையங்களினால் மீளாய்வாண்டிற்குள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொத்தப் பெறுமதி ரூபா 1,210,855 கொண்ட நடைமுறை அல்லாத சொத்துக்கள், மீளாய்வாண்டின் நிதி நிலைமைக் கூற்றில் உள்வாங்கப்படவில்லை என்பதுடன், அவை மிகை செலவினங்களாக கணக்கிலிருந்து பதிவழிக்கப்பட்டிருந்தன.	-மேற்படி-	ஆண்டிற்குள் கொள்வனவு செய்யப்பட்ட அனைத்து நடைமுறை அல்லாத சொத்துக்களையும் முறையாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், உரிய சீராக்கல்கள் செய்யப்பட வேண்டும்
(ஐ)	05 கமநலச் சேவை நிலையங்களுக்குக் கிடைக்கப்பெற்ற மொத்தப் பெறுமதி ரூபா 2,724,500 கொண்ட Shader இயந்திரங்கள் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	-மேற்படி-	கமநலச் சேவை நிலையங்களுக்குக் கிடைக்கப்பெற்றுள்ள அனைத்துச் சொத்துக்களினதும் பெறுமதியினை இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு

			நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(ஒ)	கமநலச் சேவை நிலையமொன்றினால் பயனாளிகளுக்கு மானிய அடிப்படையில் வழங்கப்பட்ட டிராக்டர் இயந்திரங்களுக்காக, உரிய நிறுவனங்களுக்கு கமநலச் சேவை நிலையத்தினால் செலுத்தப்பட வேண்டிய ரூபா 700,578 பெறுமதியானது நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.	-மேற்படி-	மீளாய்வாண்டின் இறுதித் திகதிக்கு கமநலச் சேவை நிலையங்களினால் செலுத்தப்பட வேண்டிய கணக்கு மீதிகளைச் சரியாக இனங்கண்டு கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஓ)	மீளாய்வாண்டிற்குள் இரண்டு கமநலச் சேவை நிலையங்களுக்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற மொத்தப் பெறுமதி ரூபா 198,000 ஐ கொண்ட நடைமுறைச் சொத்துக்கள், மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின் நிதி நிலைமை கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	-மேற்படி-	கமநலச் சேவை நிலையங்களுக்கு நன்கொடையாகக் கிடைக்கப்பெறும் அனைத்துச் சொத்துக்களையும் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஔ)	02 கமநலச் சேவை குழுக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 123,204 கொண்ட நடைமுறைச் சொத்துக்கள் நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை.	-மேற்படி-	கமநலச் சேவை நிலையத்திற்கு சொந்தமான அனைத்துச் சொத்துக்களையும் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(க)	இரண்டு கமநலச் சேவை நிலையங்களின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் இல் உள்ளவாறு TSP மற்றும் யூரியா உர மீதிகள் ரூபா 1,799,395 ஆக இருந்த போதிலும், அது நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 2,041,683 ஆக காட்டப்பட்டிருந்தமையினால், நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் மிகையானது ரூபா 242,288 இனால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.	-மேற்படி-	கணக்கீடு ஆண்டின் இறுதித் திகதிக்கு கமநலச் சேவை நிலையத்தின் வசமுள்ள இருப்பு மீதிகளைச் சரியாகக் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், உரிய சீராக்கல்கள் செய்யப்பட வேண்டும்.
(கா)	கமநலச் சேவை நிலையமொன்றில் விதை நெல் கடன் அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டமைக்கான ரூபா 565,250 கடன்பட்டோர் பெறுமதியானது, மீளாய்வாண்டின் நிதி நிலைமை கூற்றில் குறைவாக உள்ளடக்கப்பட்டிருந்தமையினால் நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் மிகையானது அந்தத் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.	-மேற்படி-	கணக்கீடு ஆண்டின் இறுதித் திகதிக்கு நிலுவையிலுள்ள பெறப்பட வேண்டிய அனைத்து கணக்கு மீதிகளையும் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், உரிய

			சீராக்கல்கள் செய்யப்பட வேண்டும்.
(கி)	கமநலச் சேவை குழுவொன்றின் விவசாயி வங்கியின் நிதியைக் கொண்டு கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 375,130 பெறுமதியான கணினி மற்றும் அச்சுப்பொறி என்பன கமநலச் சேவை குழுவிற்குப் பொறுப்பளிக்கப்பட்டிருந்த போதிலும், கமநலச் சேவை குழுவின் நிதி நிலைமை கூற்றில் அவை உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	-மேற்படி-	கையகப்படுத்தப்பட்ட சொத்துக்களை கமநல சேவைகள் குழுவின் சொத்துக்களாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்
(கீ)	03 கமநல சேவை நிலையங்களினால் பௌதீக ரீதியாக அல்லது ஆவண ரீதியாக உறுதிப்படுத்தப்படாத ரூபா 839,173 பெறுமதியான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் மீளாய்வாண்டின் நிதி நிலைமை கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.	-மேற்படி-	சொத்துக்களின் மீதிகளைச் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், தொடர்புடைய சீராக்கல்களும் செய்யப்பட வேண்டும்.
(கு)	02 கமநல சேவைக் குழுக்களில் ரூபா 980,638 பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டமை திரட்டப்பட்ட நிதியில் வரவு வைக்கப்பட்டிருந்தமையினால், திரட்டப்பட்ட நிதி அந்தத் தொகையினால் அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது.	-மேற்படி-	சொத்துக்கள் கொள்வனவு தொடர்பான சரியான கணக்கீட்டுக் கொள்கைக்கமையப் பதிவுகளை மேற்கொண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(கூ)	மீளாய்வாண்டினுள் 05 கமநல சேவை நிலையங்களுக்கு உரியவாறு, செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட ரூபா 124,156 மற்றும் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பெறப்பட்ட ரூபா 427,497 ஆகிய காசுப் பாய்ச்சல்கள் உரிய சரியான நடவடிக்கைகளின் கீழ் உள்ளடக்கப்படாமல் காட்டப்பட்டிருந்தன.	-மேற்படி-	ஒவ்வொரு நடவடிக்கையின் கீழும் உருவான வரவு மற்றும் கொடுப்பனவுப் காசுப் பாய்ச்சல்களை, உரிய நடவடிக்கைகளின் கீழ் வெவ்வேறாக காசுப் பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(கெ)	06 கமநல சேவைக்குழுக்களில் ரூபா 3,603,160 மொத்தப் பெறுமதியான சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டமை, காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும், அது செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.	-மேற்படி-	-மேற்படி-

(கே)	கமநல சேவை நிலையமொன்றின் விவசாய வங்கியில் 2021 யூன் 5 ஆம் திகதி முதல் 2024 யூன் 18 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குத் தொடர்புடையதாகக் கண்டறியப்பட்ட ரூபா 2,260,524 மொத்தப் பெறுமதியுடைய நிதி மோசடி பற்றிய விபரங்கள், விவசாய வங்கியின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.	-மேற்படி-	கமநல சேவை நிலையத்தில் இடம்பெற்றுள்ள இனங்காணப்பட்ட அனைத்து நிதி மோசடிகளும் மற்றும் கணிசமான விடயங்களும் நிதி கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அதற்காக முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	கமநல சேவைக்குழுவொன்றின் 10 கணக்கு விடயங்களுக்குரிய நடைமுறை ஆண்டின் ஆரம்ப மீதிகளுக்கும், கடந்த ஆண்டின் இறுதி மீதிகளுக்கும் இடையே ரூபா 7,522,868 பெறுமதியான இணக்கமின்மை காணப்பட்டது.	எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய இணக்கப்பாடுகளைச் செய்து, சரியாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	கமநல சேவை நிலையமொன்றின் விவசாய வங்கியின் சேமிப்புக் கணக்கில் 2024 திசெம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை கூற்றின் பிரகாரமும் வங்கிச் சேமிப்புப் புத்தகத்தின் பிரகாரமும் மீதியானது ரூபா 4,433,968 எனக் காட்டப்பட்டிருந்த போதிலும், காசுப் புத்தகத்தின் படி அது ரூபா 659,345 எனக் காட்டப்பட்டிருந்தமையினால் ரூபா 3,774,623 பெறுமதியான இணக்கமின்மை காணப்பட்டது.	- மேற்படி -	- மேற்படி -
(இ)	கமநல சேவைக் குழுவொன்றின் MOP உர வியாபாரக் கணக்கில் கடந்த ஆண்டின் இறுதித் திகதியன்று காணப்பட்ட இருப்பு மீதி ரூபா 10,516,419 ஆக இருந்த போதிலும், நடைமுறை ஆண்டின் ஆரம்ப மீதியானது ரூபா 8,151,391 எனக் காட்டப்பட்டிருந்தமையினால் ரூபா 2,365,028 பெறுமதியான இணக்கமின்மை காணப்பட்டது.	- மேற்படி -	- மேற்படி -

(ஈ)	கமநல சேவைக் குழுவொன்றின் 2024 திசெம்பர் 31 ஆம் இல் உள்ளவாறு நிதி நிலைமை கூற்றில் நடைமுறை அல்லாத பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள, கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய டிராக்டர் மற்றும் விவசாய உபகரணங்களுக்கான தவணைக் கட்டணம் ரூபா 170,000 ஆக இருந்த போதிலும், டிராக்டர்களைப் பெற்றுக்கொண்ட விவசாயிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய தொகையாக ரூபா 684,000 எனக் காட்டப்பட்டிருந்தமையினால், செலுத்த வேண்டிய மீதிக்கும் அறவிடப்பட வேண்டிய மீதிக்கும் இடையே ரூபா 514,000 பெறுமதியான இணக்கமின்மை காணப்பட்டது.	- மேற்படி -	- மேற்படி -
(உ)	மீளாய்வாண்டினுள் 04 கமநல சேவை நிலையங்களுக்கு உரியவாறு, ரூபா 82,415,747 மொத்தப் பெறுமதியுடைய 24 கொடுக்கல்வாங்கல்கள் காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 77,589,088 எனக் காட்டப்பட்டிருந்தமையினால் ரூபா 4,826,659 பெறுமதியான இணக்கமின்மை காணப்பட்டது.	எதிர்காலத்தில் சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய இணக்கப்பாடுகளைச் செய்து, காசு வரவுகள் மற்றும் கொடுப்பனவுகள் தொடர்பான அனைத்துப் காசுப் பாய்ச்சல்களையும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.3.4 தொங்கல் கணக்குகள்

விடயம்	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டிலும், 02 கமநல சேவைக் குழுக்களுக்குரிய ரூபா 389,195 மொத்தப் பெறுமதியுடைய இரண்டு தொங்கல் கணக்கு மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது நீண்ட காலமாக நிலுவையில் உள்ளதுடன், எதிர்காலத்தில் முறையான அங்கீகாரத்துடன் நிதி கூற்றுக்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தொங்கல் கணக்கு உருவாவதற்கான காரணங்களை இனங்கண்டு, அதற்கமைய முறையான அதிகாரத்தின் கீழ் தொங்கல் கணக்குகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.3.5 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
22 கமநல சேவைக் குழுக்களுக்குத் தொடர்புடைய ரூபா 4,457,769 மொத்தப் பெறுமதியுடைய நடைமுறை அல்லாத சொத்துக்கள், ரூபா 81,052,313 மொத்தப் பெறுமதியுடைய நடைமுறைச் சொத்துக்கள், ரூபா 3,111,050 மொத்தப் பெறுமதியுடைய நடைமுறை அல்லாத பொறுப்புக்கள், ரூபா 135,847,421 மொத்தப் பெறுமதியுடைய நடைமுறைப் பொறுப்புக்கள் மற்றும் ரூபா 72,967,662 மொத்தப் பெறுமதியுடைய வருமான மீதிகள் என்பவற்றிற்கான நிலையான சொத்துப் பதிவேடு, விரிவான துணைப் பதிவேடுகள், நிலையான வைப்புச் சான்றிதழ்கள், நாளதுவரையாக்கப்பட்ட கடன்பட்டோர் பதிவேடுகள், நாளதுவரையாக்கப்பட்ட கடன் கொடுநர் பதிவேடுகள், மீதி உறுதிப்படுத்தல்கள், காலப் பகுப்பாய்வுகள், சமப்படுத்தப்பட்ட பேரேட்டுக் கணக்குகள், இருப்புப் பதிவேடுகள், காசுப் புத்தகங்கள், வங்கி இணக்கக் கூற்றுக்கள், வங்கிக் கூற்றுக்கள், வைப்புப் பதிவேடுகள், வங்கிச் சேமிப்புப் புத்தகங்கள், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களினால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உர உறுதிச்சீட்டுகள் தொடர்பான விபரங்கள், கடன் பெறுவது தொடர்பான ஒப்பந்தங்கள், கடன் கொடுப்பனவு அறிக்கைகள், மேட்டு நிலங்கள் உள்ளடங்கிய விவசாய நிலப் பதிவேடு, வருமான மற்றும் செலவீனப் பதிவேடுகள் என்பன காணப்படாமையினால், கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் உறுதிப்படுத்தல்களைப் பார்வையிட முடியாமல் இருந்தது.	உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தின் பின்னர் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.	சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவீன மீதிகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகளைத் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1. 4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு	இணங்காமை	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ) 2011 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம்.			
(i) 43(9) ஆம் பிரிவு	இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பொதுக்கூட்டம் நடத்தாத 56 விவசாய அமைப்புகளுக்காக பொதுக்கூட்டத்தைக் கூட்டுவதற்கு, 05 கமநல சேவை நிலையங்களுக்குச் சொந்தமான செயற்குழுக்கள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	விவசாய அமைப்புகளின் வருடாந்த பொதுக்கூட்டத்தை எதிர்வரும் ஆண்டில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	உரிய சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii) 53 (4) ஆம் பிரிவு	மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை விவசாய நிலப் பதிவேட்டை மீளாய்வு செய்து சான்றுப்படுத்தும் செயல்முறையை, 09 கமநல சேவை நிலையங்களின் சார்பாக கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் மேற்கொண்டிருக்கவில்லை	கடைசியாக 2019 ஆம் ஆண்டில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் சான்றுப்படுத்தப்பட்டது. எதிர்காலத்தில் மீண்டும் அவ்வாறு செய்வதற்கு எதிர்பார்க்கின்றேன்.	-மேற்படி-
(iii) 55 (1) ஆம் பிரிவு	09 கமநல சேவை நிலையங்களினால் விவசாய நிலங்களை அளவீடு செய்வதற்கு எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை	நிலத்தை அளவீடு செய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதில் மாவட்ட அலுவலகத்தின் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.	உரிய சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாணக் கோவை			
(i) 110 ஆம் நிதி பிரமாணம்	15 கமநல சேவை நிலையங்களினால் சேதங்கள் மற்றும்	எதிர்காலத்தில் பேணுவதற்கு நடவடிக்கை	உரிய சட்ட திட்டங்கள் மற்றும்

	இழப்புகள் தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை	எடுக்கப்படும்	ஒழுங்கு விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ii) 245(3) ஆம் நிதி பிரமாணம்	அனைத்து உறுதிச்சீட்டுகளினதும் உரிய விபரங்கள் குறித்த பேரேட்டில் குறித்த கணக்குகளின் கீழ் புத்தகங்களில் பதிவு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 08 கமநல சேவை நிலையங்களினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.	- மேற்படி -
(iii) 262(2) ஆம் நிதி பிரமாணம்	செலுத்தப்பட்ட அனைத்து உறுதிச்சீட்டுகளும் மீண்டும் ஒருமுறை கொடுப்பனவுக்காகச் சமர்ப்பிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக “செலுத்தப்பட்டது“ எனும் முத்திரை இடப்பட வேண்டியிருந்த போதிலும், 11 கமநல சேவை நிலையங்களினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	மேற்படி -	மேற்படி -
(iv) 502(2) ஆம் நிதி பிரமாணம்	14 கமநல சேவை நிலையங்களினால் நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	- மேற்படி -
(இ) கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கைகள்			
(i) 1987 பெப்ரவரி 18 திகதிய 55 ஆம் இலக்க சுற்றறிக்கை	பல வருடங்களாகத் தொடரும் அறவிடப்பட வேண்டிய பற்று மீதிகளை அறவிடுவதற்கு அல்லது அவ்வாறு செய்ய முடியாத பட்சத்தில் முறையான அதிகாரத்தின் கீழ் புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு	பல வருடங்களாகத் நிலவி வரும் மீதிகள் என்பதால் இது தொடர்பான தகவல்கள் கமநல சேவைக்குழுவிடம் இல்லை எனவும், இந்த மீதிகளை எதிர்காலத்தில்	- மேற்படி -

		நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	
	(ii) 1981 ஒக்தோபர் 16 ஆம் திகதிய 107 ஆம் இலக்க கமநல சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 30.2 ஆம் பந்தி	நிதி கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கடன்பட்டோர் மீதிகளின் சரியான தன்மையை உரிய கடன்பட்டோரிடமிருந்து உறுதிப்படுத்தி, அவ்வுறுதிப்படுத்தல்களை நிதி கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை.	பல வருடங்களாகத் நிலவி வரும் மீதிகள் என்பதால் இது தொடர்பான தகவல்கள் கமநல சேவைக்குழுவிடம் இல்லை எனவும், இந்த மீதிகளை எதிர்காலத்தில் நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	-மேற்படி -
	(iii) 2016 பெப்ரவரி 09 திகதிய 2016/03 ஆம் இலக்க கூற்றறிக்கையின் 02 ஆம் பந்தி	ஒவ்வொரு விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தரும் குறைந்தது 04 மாதங்களுக்கு ஒரு முறையாவது விவசாய அமைப்புகளைப் பரிசோதித்து, விவசாய அமைப்பு பரிசோதனை அறிக்கையை விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் சமர்ப்பிக்க வேண்டும் என்ற போதிலும், அவ்வாறு செயற்படவில்லை.	எதிர்காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.	-மேற்படி -
	(iv) 2020 யூன் 25 திகதிய கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 08/20 ஆம் இலக்கச் சுற்றறிக்கை.	பணம் மற்றும் மீதி தொடர்பான பணிகளில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்கள் பிணை வைப்பினை மேற்கொள்ள வேண்டிய போதிலும், 2024 ஆம் ஆண்டளவில் 22 கமநல சேவை மத்திய நிலையங்களைச் சேர்ந்த 53 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 442,500 பிணை வைப்புத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை	மாவட்ட உதவி ஆணையாளரின் ஆலோசனையின் பிரகாரம் பிணைமுறிக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	மேற்படி -
(ஈ)	திறைசேரிச் செயலாளரின் 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம்	வருடாந்த பெறுகை திட்டம், மனிதவள அபிவிருத்தித் திட்டம்	எதிர்வரும் ஆண்டிற்காக முறையான செயல் நடவடிக்கைத்	மேற்படி -

இலக்கப் அரச நிதிச் சுற்றறிக்கை.	மற்றும் உள்ளக கணக்காய்வுத் திட்டம் உள்ளடங்கலாக முழுமையான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்றைத் தயாரிக்குமாறு கமநல சேவை மத்திய நிலையங்களுக்குப் பணிக்கப்பட்டிருந்த போதிலும், 13 கமநல சேவை மத்திய நிலையங்களினால் மீளாய்வாண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.	திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

திருகோணமலை மாவட்டத்தின் 22 கமநலசேவை குழுக்களின் மீளாய்வாண்டின் மொத்த செயற்பாட்டு விளைவு ரூபா 27,607,659 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 14,424,955 தொகையாக காணப்பட்டமையால், நிதி விளைவுகள் ரூபா 13,182,704 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, 22 விவசாய வங்கிகளின் மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் விளைவுகளின் மொத்தமானது ரூபா 9,633,936 ஆன மிகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த ஆண்டின் மிகை ரூபா 2,559,710 ஆகியமையினால், விவசாய வங்கிகளின் நிதி விளைவுகளில் ரூபா 7,074,226 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 காசு முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
06 கமநல சேவை மத்திய நிலையங்களின் ரூபா 1,264,657 ஆன நடைமுறை கணக்கு மீதி மற்றும் ரூபா 115,502 ஆன சேமிப்புக் கணக்கு மீதி பல வருடங்களாகச் செயலற்ற நிலையில் காணப்பட்டன.	இது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.	செயலற்ற நிலையிலுள்ள கணக்கு மீதிகளை முறையான அங்கீகாரத்துடன் பயனுள்ள மற்றும் வினைத்திறனான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
ரூபா 191,334 பெறுமதியான யூரியா உர இருப்பு மீளாய்வாண்டினுள் ரூபா 115,200 இற்கு விற்பனை செய்யப்பட்டமையினால், கமநல சேவைக் குழுவிற்கு ரூபா 76,134 நட்டம் ஏற்பட்டிருந்தது.	ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்வதற்காக, மேலதிகத் தொகையை அறவிடுமாறு தொடர்புடைய கம்பனிக்கு எழுத்துமூல அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.	குறித்த காலப்பகுதிக்குள் தாமதமின்றி விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், ஏற்பட்ட நட்டத்தை ஈடுசெய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	04 கமநல சேவை குழுக்களினால் அறவிடப்படும் அறை வாடகை வருமானமானது, 2023 ஆகஸ்ட் 23 திகதிய கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 09/2015 ஆம் இலக்கச் சுற்றறிக்கைக்கு அமைவாகத் திருத்தப்பட்டு அறவிடப்படாமை காரணமாக, மீளாய்வாண்டினுள் ரூபா 255,720 அறை வாடகை வருமானம் குறைவாக அறவிடப்பட்டிருந்தது.	மாவட்ட அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.	தொடர்புடைய சுற்றறிக்கைகளுக்கு அமைவாக சரியான வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	கமநல சேவை அதிகாரப் பிரதேசத்திற்குட்பட்ட வலயத்தில் நெல் பயிர்ச்செய்கை செய்யக்கூடியதாகவிருந்த 1,747 ஏக்கர் வயல் நிலங்கள் நெல் பயிர்ச்செய்கைக்காகப் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.	இக் காணிகள் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.	நெல் பயிர்ச்செய்கை செய்யக்கூடிய வயல் நிலங்கள் காணப்படின், சட்டப்பூர்வ நிலைமைகளைக் கருத்திற்கொண்டு, தொடர்புடைய உரிமைகளைத் தீர்த்துக்கொண்டு, நாட்டின் உற்பத்தியை அதிகரிப்பதற்காக நெல் பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த போதிலும், கடன் மீளப் பெறப்படாமையினால் கமநல சேவை நிலையத்தினால் மீள கையேற்கப்பட்ட ரூபா 111,755 பெறுமதியான இரண்டு சக்கர	கைதவிர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தொடர்புடைய கடன் தொகைகளை அறவிடுவதற்கு அல்லது அறவிட முடியாதெனின் முறைப்படி பதிவழிப்பதற்கும், இயந்திரத்தைப்

	உழவியந்திரம் பழுதுபார்க்கப்பட்டு பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.		பயன்படுத்த முடியாதுவிடின் முறைப்படி அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஈ)	02 கமநல சேவை நிலையங்களின் விவசாய வங்கிப் பிரிவுகளில் நிரந்தரப் பதவியணி நியமிக்கப்படாமல், தற்காலிக வங்கி உதவியாளர்கள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களிடம் வங்கிப் பிரிவின் அனைத்துக் கடமைகளும் ஒப்படைக்கப்பட்டிருந்தன.	போதியளவான உத்தியோகத்தர்கள் இல்லை என.	அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை அடையாளம் கண்டு, அதற்கேற்ப தகுதியான நிரந்தரப் பதவியணியை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(உ)	03 கமநல சேவை நிலையங்களில் கடந்த வருடங்களிலிருந்து நிலவி வரும் மொத்தம் ரூபா 163,180,759 கொண்ட 30 கணக்கு நிலுவைகள், மீளாய்வாண்டு வரையிலும் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்வரும் காலத்தில் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	முறையான பரிசோதனையொன்றை மேற்கொண்டு, பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்கு நிலுவைகளை விரைவாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஊ)	03 கமநல சேவை நிலையங்களில் காணப்படுகின்ற, மொத்தம் சுமார் ரூபா 562,000 பெறுமதியான மற்றும் பெறுமதியைக் கண்டறிய முடியாத டிராக்டர்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள, நீர் குழாய் அமைப்புகள், மட்கிய உரத் தயாரிப்பு இயந்திரம் மற்றும் நெல் தூற்றும் இயந்திரங்கள் என்பன பல வருடங்களாகச் செயலிழந்த நிலையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.	உதவி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் எதிர்வரும் காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	கமநல சேவைச் செயற்குழுவிற்குச் சொந்தமான சொத்துக்களைப் பழுதுபார்க்கக்கூடிய நிலையில் உள்ளனவா என்பதை அடையாளம் கண்டு, பழுதுபார்த்துப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கோ அல்லது பழுதுபார்க்க முடியாதெனின் முறைப்படி அகற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(எ)	இரண்டு கமநல சேவை நிலையங்களில் ரூபா 1,081,821 பெறுமதியான உரத் தொகுதி, குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விநியோகிப்பதற்கோ அல்லது விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாகக் காலாவதியாகியிருந்தது.	எதிர்வரும் காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	நிதி பிரமாணம் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து, நட்டங்களை ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.4 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கோ அல்லது பயன்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக, 04 கமநல சேவை நிலையங்களில் பல வருடங்களாகக் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த 16,908 தொன் கரிம உரம் மற்றும் ரூபா 419,262 பெறுமதியான மரக்கறி விதைத் தொகுதி என்பன பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.	எதிர்வரும் காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தேவையைக் கண்டறிந்து அதற்கேற்ப கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களை அவை காலாவதியாவதற்கு முன்னர் வழங்குவதற்கோ அல்லது பயன்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	2020 ஒக்டோபர் 08 ஆம் திகதிய 09/2020 ஆம் இலக்க விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 3.12 ஆம் பந்தியின் பிரகாரம், தேவையான அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்ளாமல், விவசாய வங்கி ஒன்றினால் 12 விவசாயிகளுக்கு ரூபா 745,400 பெறுமதியான கடன் தொகை வழங்கப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கிறேன், எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	ஒவ்வொரு கடன் வகையினதும் மற்றும் கடன் தொகையினதும் அடிப்படையில், நடைமுறையிலுள்ள மற்றும் தேவையான அங்கீகாரத்தின் கீழ் மாத்திரமே கடன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	பொருட்களைக் கடனுக்கு விற்பனை செய்வது தொடர்பான கடன் விண்ணப்பப் படிவங்களுக்கு, விவசாய அபிவிருத்தி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்ற போதிலும், அவ்வாறு அங்கீகாரம் பெறாமல் விவசாய சேவை மையம் ஒன்றினால் ரூபா 2,528,880 பெறுமதியான பொருட்கள் கடனுக்கு வழங்கப்பட்டிருந்தது.	ஏற்றுக்கொள்கிறேன், எதிர்காலத்தில் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.	ஒவ்வொரு கடன் வகையினதும் மற்றும் கடன் தொகையினதும் அடிப்படையில், நடைமுறையிலுள்ள மற்றும் தேவையான அங்கீகாரத்தின் கீழ் மாத்திரமே கடன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செயற்படாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
06 கமநல சேவைச் குழுக்களில் 04 புல் வெட்டும் இயந்திரங்கள், 04 களை பிடுங்கும் இயந்திரங்கள், 05 நெல் அறுவடை இயந்திரங்கள், 01 உழவு இயந்திரம் மற்றும் 01 பன்முக வெட்டு இயந்திரம், ஒரு இருசக்கர டிராக்டர் மற்றும் ஒரு கலப்பை ஆகியவை பல வருடங்களாகப் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் இருந்தன.	கமத்தொழில் அபிவிருத்திச் சபையிடமிருந்து அங்கீகாரம் பெற்ற பின்னர், அந்த இயந்திர உபகரணங்களை பழுதுபார்த்து வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்காக வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கமநல சேவைச் குழுக்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் பழுதுபார்க்கக்கூடிய மட்டத்தில் காணப்படின், அவற்றை பழுதுபார்த்து பயனுள்ள முறையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு இல்லாத சொத்துக்கள் முறையாக கைதவிர்ப்பு செய்யப்பட வேண்டும்.

3.6 மனித வளங்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் 15 கமநல சேவைச் குழுக்களில் 11 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 10 விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், 13 முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள், 55 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள், 03 பாதுகாப்பு ஊழியர்கள் மற்றும் 05 ஊழியர்களின் பற்றாக்குறை நிலவியமை அவதானிக்கப்பட்டது.	மனித வளங்கள் தொடர்பான தகவல்கள் மாவட்ட உதவி ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	பதவியணி மட்டங்களை மீண்டும் மீளாய்வு செய்து, அவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

05. கமநல வங்கிகள்

	கணக்காய்வு அவதானிப்பு	முகாமைத்துவ கருத்துரை	பரிந்துரை
(அ)	கமநல வங்கிகள் தொடர்பான 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 04/2012 ஆம் இலக்க விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 2.4.1 ஆம் பிரிவின்படி, விவசாயிகள் உற்பத்தி, பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதை ஊக்குவிப்பதற்கான திட்டமொன்றைத் தயாரிப்பது கடன் கட்டுப்பாட்டு சபையினதும் விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும் எனத் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 04 கமநல சேவை மையங்களில் அந்த நோக்கத்திற்காக சேமிப்பு மற்றும் கடன் நடவடிக்கைகளில்	எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	தொடர்புடைய சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செயற்பட வேண்டும்.

	உள்வாங்குவதற்கான சாத்தியமான வாடிக்கையாளர் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.		
(ஆ)	கடன் ஒப்பந்தக் காலம் முடிவடைந்துள்ள, மொத்தப் பெறுமதி ரூபா 33,277,694 ஐ கொண்ட 07 கமநல சேவைச் குழுக்களுக்குரிய 239 கடன் நிலுவைகள், மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.	கடன்களை வழங்குதல் மற்றும் அறவிடுதல் தொடர்பாகக் உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காமை குறித்து முறையான விசாரணையொன்றை நடத்தி, தொடர்புடைய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும், அறிடப்பட வேண்டிய நிலுவைக் கடன் தொகைகளை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	06 கமநல சேவை மையங்கள் தொடர்பாக, கமநல வங்கிகளின் வவுசர் புத்தகங்களைச் சேகரித்தல், வவுசர்களை விநியோகித்தல், பணம் பெறுதல், நாளாந்தப் பணப் பதிவேட்டைத் தயாரித்தல், பணம் செலுத்துதல், வவுசர்களை தயாரித்தல், வங்கிப் பணத்தைக் கையாளுதல், கடன்களை வழங்குதல், பணப் பாதுகாப்புப் பெட்டகத்தைப் பாதுகாத்தல் மற்றும் கணக்குகளைத் தயாரித்தல் போன்ற அனைத்துக் பணிகளும் வங்கிப் பிரிவின் ஒரு உத்தியோகத்தரினால் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. அதற்கமைய, நிதிப்பிரமாணம் 135 இன் பிரகாரம் ஒவ்வொரு பணியும் பல உத்தியோகத்தர்களினால் மேற்பார்வை செய்யப்படக்கூடிய வகையில் உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதியொன்று நிறுவப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வாறு செயற்படப்பட்டிருக்கவில்லை.	உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் நிலவுவதன் காரணமாகவே அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. உத்தியோகத்தர்கள் கோரப்பட்டுள்ளனர் என்பதுடன், எதிர்காலத்தில் அதற்கமைய நடவடிக்கை எடுக்கின்றேன்.	நிதிப்பிரமாணங்களின் பிரகாரம், எப்போதுமே பல உத்தியோகத்தர்களின் ஊடாக மேற்பார்வை செய்யப்படக்கூடிய வகையில் உள்ளக கட்டுப்பாட்டுத் தொகுதிகளை நிறுவி, அதற்கமைய மேற்பார்வை செய்வதற்கும், இடம்பெறக்கூடிய மோசடிகள் மற்றும் தவறுகளைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(ஈ)	04 கமநல சேவை மையங்கள் தொடர்பாக, கமநல வங்கிகளின் செயல்பாடுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பேணப்பட வேண்டிய சேமிப்புத் துணை அட்டவணை, சிறு குழுச் சேமிப்புத் துணை அட்டவணை, கட்டாயச் சேமிப்புத் துணை அட்டவணை மற்றும் பங்குத் துணைப் பேரேடு போன்ற கமநல வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களைச் சரியாகப் பதிவு செய்வதற்காகப் பேணப்பட வேண்டிய ஆவணங்கள் முறைப்படி பேணப்பட்டிருக்கவில்லை	உத்தியோகத்தர்கள் கோரப்பட்டுள்ள போதிலும் இன்னும் கிடைக்கப் பெறாததால், எதிர்காலத்தில் அவர்கள் கிடைத்த பின்னர் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.	கமநல வங்கிகளினால் பேணப்பட வேண்டிய ஆவணங்களைச் சரியாகப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.